1993 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 135, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

135—

மேல்செங்கம் மத்திய மாநில பண்ணையில் தோட்டக்கலைக் கல்லூரி நிறுவுதல்.

*9785—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்செங்கம் மத்திய மாநிலப் பண்ணையில் தோட்டக் கலைக் கல்லூரி நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மேல்செங்கம் மத்திய மாநில பண்ணையில் தோட்டக் கலை கல்லூரி நிறுவும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்செங்கத்தில் அமைந்துள்ள மத்திய மாநில பண்ணை மத்திய அரசுக்கு சம்பந்தப்பட்டது. மத்திய மாநிலப் பண்ணையை அமைப்பதற்கு முன்னால் மேல்புழுதியூர், வேடங்குப்பம் என்ற இரு கிராமங்களுக்கு மத்தியில் கிட்டத்தட்ட 6 ஆயிரம் ஏக்கர் நிலத்தை அவர்கள் பார்த்தார்கள். ஆனால் அது ஏதுவாக இல்லையென்று மேல்செங்கத்திற்கு அந்தப் பண்ணை சென்றுவிட்டது. அந்த இடத்தில் இப்பொழுது கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது அது நம் அரசுக்கு சம்பந்தப்பட்டது. அந்த இடத்தில்தான் தோட்டக் கலைக் கல்லூரியை ஏற்படுத்த ஆவன செய்ய முடியுமா என்று கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பெரியகுளத்தில் தோட்டக் கலைக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. அங்கே படித்து

பட்டம்பெற்று வெளியே வரக்கூடிய பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பது என்பது அரிதாக இருக்கிறது. இந்த சூழ் நிலையில் புதியதொரு தோட்டக் கலைக் கல்லூரி துவங்குவது. சற்று சிரமமாக இருக்கிறது. அப்படி தேவைப்படுகின்ற காலத் தில் உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசிலனை செய்யும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் கிட்டத் தட்ட மானாவாரி நிலங்கள் 6 லட்சம் ஏக்கருக்கு மேல்கூட இருக்கிறது. செங்கத்தில் மட்டும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் மானாவாரி நிலம் இருக்கிறது. மானாவாரி நிலத்தில் சரியாக விளைச்சல் வருவது கிடையாது. அது மழையின் தன்மையைப் பொறுத்தது. அதுமட்டுமல்ல, தோட்டக் கலைப் பயிர்கள் வளர அந்த இடம் ஏதுவாக இருக்கிறது. சாத்தியக்கூறு அங்கே அதிக அளவில் இருக்கிறது. நீடுதுயர் நீக்க பாடி வந்த நிலாவாக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியின் நல் லாட்சியில் செங்கத்தில் தோட்டக் கலைக்கல்லூரி ஒன்றை ஏற்படுத்தினால் பக்கத்திலுள்ள தர்மபுரி, தென்னாற்காடு மற்றும் அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களும் பயன்படும். ஆகவே, அரசு இது அவசியம் என்பதால் கனிவுடன் பரிசீலிக்குமா என்று கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை அரசு பரி சீலித்து, அந்தப் பகுதியிலே தோட்டக் கலைப் பயிர்களை வளர்ப் பதற்கு அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 136, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

136—

தேர்வுநிலைப் பேரூராட்சிகளுக்கு வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டுதல்.

*9567 —டாக்டர் ஜெ. பரந்தாமன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேர்வுநிலைப் பேரூராட்சிகளுக்கு வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் துவங்கும்?